**பனை அபிவிருத்திச் சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பனை அபிவிருத்திச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலுள்ள மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடசச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான குறிபுரைகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | SLPSAS 02 இன் பந்தி 27 (ஆ) இன் பிரகாரம், அக்காலப் பகுதியின் போது பெறவேண்டியவைகளிலுள்ள கழித்தல்கள் நேரற்ற முறையின் கீழான செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப் பாய்ச்சலை அதிகரிக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 3,871,611 தொகையான வியாபார பெற வேண்டியவைகளின் வீழ்ச்சி காசுப் பாய்ச்சல் கூற்றில் கழிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் தவறுகளை திருத்துவதுடன் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை தடுப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ii) | முன்னைய ஆண்டு நிதிக்கூற்றில் ரூபா 1,504,555 தொகையான வீரவல கட்டிடத்திற்காக நடைபெறும் வேலையின் அதிகரித்துக் கூறல் SLPSAS 03 இல் வேண்டப்பட்டவாறு முறையாக சீராக்கல் செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திருத்தப்பட்டிருந்தது. மேலும், இது காசல்லாத திருத்தமாக இருந்தமையால் இந்த சீராக்கலுடன் உள்ளபடியான காசுப் பாய்ச்சல் இணைக்கப்பட்டிருக்காத போதிலும் திருத்தப்பட்ட ரூபா 1,504,555 ஆன தொகை மீளாய்வாண்டிற்கான முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் தவறாக கழிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை ஏற்படாதிருக்க உறுதிப்படுத்தும் | - மேற்படி- |
| (iii) | SLPSAS 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் வருகையாளருடைய செயற்பாடுகளில் தன்மை அல்லது செயற்பாடு ஒரே வகையான சொத்து வகுதியினை கொண்டிருக்காமல் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா | உபபாகங்களின் உற்பத்தி வகுதி SLPSAS இற்கமைய 2024 நிதிக்கூற்றுக்களில் உரிய வகுதியின் கீழ் | - மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 119,098,441 தொகையான உபபாகங்களின் உற்பத்தி கிரயம் காட்டப்பட்டிருந்தது. | திருத்தப்படும். | |
| (iv) | SLPSAS 07 இன் 71 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயனபாட்டு காலம் வருகையாளருக்கு சொத்துக்களுடைய எதிர்பார்த்த பயன்பாட்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சபையானது 15 முதல் 25 ஆண்டுகள் பயன்பாட்டு காலத்தின் பொதுவான மதிப்பீடாக 20 ஆண்டுகளிற்கு பதிலாக 10 ஆண்டுகளிற்கு மேலாக கட்டிடத்தை பெறுமானத்தேய்வு செய்திருந்தது. இதன்விளைவால், மீளாய்வாண்டிற்கான மிகைகள் ரூபா 3,316,874 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 74,913,538 ஆன திரண்ட பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கட்டிடத்தை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் SLPSAS இற்கமைய 15 முதல் 25 ஆண்டுகளாக இது பெறுமானத்தேய்வு செய்யப்படும். | - மேற்படி- - |
| (v) | SLPSAS 11 இற்கமைய மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 23,000,000 தொகையான மூலதன மானியங்கள் மற்றும் ரூபா 6,086,000 தொகையான விசேட செயற்திட்டத்திற்கான அரசாங்க மானியங்கள் வருமானமாக அனுமதித்திருக்கவில்லை. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான மிகைகள் ரூபா 29,086,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை ஏற்படாதிருக்க உறுதிப்படுத்தும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுக வேண்டும்.. |

### 1.5.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2017 நவம்பர் 24 இல் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சபைக்கு சொந்தமான காணி பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாதிருந்த 8 காணிகளின் உரிமையாண்மையை சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் ஏற்கனவே காரைநகரிலுள்ள காணி மற்றும் உற்பத்திக் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கு உரிய பிரிவுக்கு அறிவுறுத்தியிருந்ததுடன் 2024 நிதிக்கூற்றுக்களில் இது உள்ளடக்கப்படும். | சபைக்கு சொந்தமான சகல சொத்துக்களும் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | ஐந்து ஆண்டுகளை விட குறைவாக சேவையை பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்களிற்காக பணிக் கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 641,670 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், ஐந்து ஆண்டு கால சேவையை பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்களிற்காக ஒரு ஆண்டு மாத்திரமே பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால் பணிக்கொடைக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,285,770 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உங்களுடைய வழிகாட்டல் பிரகாரம் 5 ஆண்டகள் பூர்த்தி செய்திருந்தவர்களிற்காக ஏற்பாடுகளை வழங்குவதற்கு நாங்கள் உடன்படுகின்றோம். | சரியான வழியில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 2,077,111 இற்கு பதிலாக ரூபா 6,607,428 ஆக செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சலில் தவறாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல் ரூபா 4,530,317 ஆல் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 6,607,428 ஆன பணிக்கொடை கொடுப்பனவு தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது. நடைமுறை பொறுப்புக்களின் கீழ் ரூபா 4,530,317 செலுத்த வேண்டிய தொகை பட்டியலிடப்பட்டதுடன் 2024 இல் இது திருத்தப்படும். . | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டிற்காக ரூபா 8,146,837 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான (EPF) ஊழியர் பங்களிப்புகள் EPF செலவின கணக்கின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால் சம்பள செலவினம் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் EPF செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | EPF இன் கீழ் 12 % ஊழியர் பங்களிப்பு பதியப்பட வேண்டும். அதேநேரம் மிகுதியாக இருக்கின்ற பகுதி சம்பளங்களின் கீழ் சரியாகக் குறிப்பிடப்படும். | EPF இற்கான ஊழியர் பங்களிப்புகள் சம்பள செலவினக் கணக்கின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆவணரீதியான சான்றுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 20,712,184 ஆன மீதியின் உள்ளதன்மை மற்றும் உண்மை தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதுடன் அவர்களுடைய விதப்புரைகள் அடிப்படையில் தேவயான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கோரப்படுமாயின் கணக்காய்விற்கு சகல வேண்டப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள்

### 1.6.1. பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருக்கின்ற வியாபார பெற வேண்டியவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,338,434 கூட்டுத் தொகையான 08 சில்லறை கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதுடன் அவர்களுடைய விதப்புரைகள் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய நேரத்தில் நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 முதல் 05 ஆண்டுகளாக நிலுவையாக இருந்த ரூபா 306,875 கூட்டுத் தொகையான 05 வியாபார பெற கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 2,967,592 கூட்டுத் தொகையான 08 சில்லறை கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் இருக்கின்ற தீர்ப்பனவுகள் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் உரிய தரப்பினருக்கு செய்யப்படும். | உரிய நேரத்தில் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி 177(1) | சாத்தியமானளவு விரைவாக சேகரிக்கப்பட்ட பணங்கள் வங்கியில் வைப்பச் செய்யப்பட வேண்டிய போதிலும் கொழும்பு கற்பகம் விற்பனை நிலையத்தில் உரிய திகதிக்கு பின்னரே தாமதமாக வைப்பிலிடுவது வழமையாக உள்ளது. 49 சந்தர்ப்பங்களில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,539,930 மொத்தமான பணம் 02 மாதங்களிற்கு மேலாக வைப்பு செய்வதற்கு முன்னர் 3 முதல் 8 நாட்கள் வரையான கால வீச்சில் நிறுத்திவைத்திருந்தனர் என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது | எதிர்காலத்தில் கற்பகம் விற்பனை நிலையத்தில் விற்பனைகளை வைப்புச் செய்வதை முகாமைத்துவம் நெருக்கமாக கண்காணிக்கும் என்பதுடன் அத்தகைய தவறுகள் திரும்பவும் ஏற்படாதிருக்கும் என உறுதிப்படுத்துகின்றோம் | நிதிப் பிரமாணங்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை யால் திருத்தப்பட்ட நி.பி 371(2)(ஆ) | பிரமாணங்களிற்கு முரணாக 76 சந்தர்ப்பங்களில் நிறைவேற்று தரமில்லாத உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,601,850 கூட்டுத் தொகையான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், பொதுத் திறைசேரியிடம் முன்னனுமதி பெறாமல் 5 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 குறித்த எல்லையை விஞ்சி ரூபா 2,800,000 கூட்டுத் தொகையான உப கட்டுநிதி முகாமைத்துவத்தால் வழங்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் அவசர தேவைகளிற்காக உப கட்டுநிதியை பயன்படுத்துவதில் மிகுந்த அசட்டையீனத்தை தொடர்ந்கும் பேண வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் நிறைவேற்று தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு சபை அனுமதி பெறுவதற்கு நாங்கள் உறுதியளிக்கின்றொம். | நிதிப் பிரமாணங்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சொசலீச குடியரசின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 4.2.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | முகாமைத்தவம் கொள்வனவு வழிகாட்டலை பின்பற்றவதுடன் எதிர்காலத்தில் கொள்வனவு நடைமுறையை பின்பற்றி கொள்வனவு திட்டம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு வழிகாட்டலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,954,969 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிலுள்ள நேரொத்த பற்றாக்குறை ரூபா 24,786,100 ஆக இருந்தது. ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 12,831,131 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. உள்ளூர் விற்பனை வருமானங்ள் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்காக காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கண்டி விற்பனை நிலையத்தின் பரிசோதனையில், 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து இருப்பு முகாமைத்துவத்தின் முழுமையபன சீர்குலைவால் சமப்படுத்தல் முறைமை செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் பிரதான அலுவலகத்திலிருந்தான விற்பனை விடயங்கள் கணனி முறைமையில் நாளதுவரையாக்கப் பட்டிருக்காததுடன் CCTV பாதுகாப்பு இன்மைய உள்ளடங்கிய உள்ளக கட்டுப்பாடுகள் இல்லாதிருந்ததுடன் தேவையற்ற இருப்பு விடயங்கள் காலாவதியாகியிருந்ததுடன் மூன்று உத்தியோகத்தர்கள் போதியளவு கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை. காலாவதியாகிய விடயங்கள் குளிரூட்டல் வசதியின்மையால் விரைவில் பழுதடைந்திருந்தது. மேலும், மொத்தமாக 5,533 அலகுகளைக் கொண்ட 15 தேவையற்ற இருப்பு விடயங்கள் மற்றும் ரூபா 1,264,561 தொகையான 21 மெதுவாக நகரும் இருப்பு விடயங்கள் என்பன அவதானிக்கப்பட்டன. | சமப்படுத்தல் முறைமை உடனடியாக திருத்தப் பட்டிருந்ததுடன் பாதுகாப்பிற்காக CCTV ஐ திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், முகாமைத்துவம் அனுமதிக்கப்படாத பதிவேடுகளை விசாரணை செய்வதற்கும் தவறுகளை திருத்துவத்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். | கணனி முறைமையில் பிரதான அலுவலகத்திலிருந்து விற்பனை விடயங்களை நாளதுவரையாக்குவதற்கும் பொருளிருப்பு பதிவேடு தொடர்பில் முறையான உள்ளக கட்டுப்பாட்டை அமுலாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நிதிகளின் குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 805,000 பெறுமதியான ஒரு பால்சுத்திகரிப்பு பொறி மற்றும் 2018 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோ கல்வே பொறி என்பன ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. | பால்சுத்திகரிப்பு பொறி மற்றும் ஓட்டோ கல்வே பொறி என்பன ஏற்கனவே திருத்தப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் உற்பத்தி செயற்பாடுகளிற்குள் அவற்றினை இணைப்பதற்கு தேவையான படிமுறைகளை எடுத்திருந்தது. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டிற்காக சபையால் பயன்படுத்தப்பட்ட 22 வாகனங்களிற்கான சம்பவ குறிப்பு புத்தகங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இத்தவறுகள் திரும்பவும் ஏற்படாது என முகாமைத்துவம் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. | சம்பவ குறிப்பு புத்தகங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 182 நாட்கள் தாமதத்துடன் 2024 ஆகஸ்ட் 28 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை 2024 ஒக்தோபர் 28 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு அமுலாக்கல் முறைமை மற்றும் புதிய நிதி முகாமையாளரின் நியமானம் என்பன காரணமாக தாமதப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் குறித்த நேரத்தில் சமர்ப்பிக்கப்படும். 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கை அமைச்சு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |